(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 16 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2008, ஓகத்து 07, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0046/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாறான ஊழியர் நம்பிக்கை நிதியின் (ஈடிஎப்) மொத்தப் பெறுமதியையும்,

(ii) 2004, 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் டிசெம்பர் 31 ஆம், திகதியன்றுள்ளவாறு இந்நிதியின் மொத்தப் பெறுமதியை வெவ்வேறாகவும்,

(iii) இக்குறிப்பிட்ட தருணத்தில் பராமரிக்கப்படுகின்ற தனிப்பட்ட ஈடிஎப் உறுப்பினர் சேகரிப்புக்களின் எண்ணிக்கையினையும், மேலும்

(iv) கடந்த இரண்டு வருடங்களில் செலுத்தப்பட்ட வட்டி வீதத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) ஈடிஎப் யிலிருந்து சேகரிக்கப்படும் பணம் எங்கே முதலீடு செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) அரசாங்கக் கம்பனிகளில், அரசாங்க நிறுவனங்களில் அல்லது அரசாங்கத்துடன் தொடர்புடைய அமைப்புக்களில் ஏதாவது முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) சாத்தியக்கூற்று ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டிற்கான ஓர் அறிக்கையினை அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் குறிப்பிடப்படாத கம்பனிகளில் ஏதாவது முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு தவிர்ந்த ஏனைய நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டிற்காகப் பெறப்பட்ட பங்கிலாபத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0047/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு யூலையில் மாவிலாறில் விவசாயிகள் முகம் கொடுத்த பிரச்சினைக்கான காரணத்தையும்,

(ii) பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கையினையும் இம் முரண்பாட்டில் மதிப்பிடப்பட்ட நிலத்தின் விஸ்தீரணத்தையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) விவசாயிகளுக்கு செலுத்தப்பட்ட பணத்தின் அளவையும்,

(ii) விவசாயிகளல்லாதோருக்கு ஏதாவது கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அவர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) விவசாயிகளல்லாதோருக்கு நட்டஈடு காசோலை மூலமா, காசு மூலமமா அல்லது வங்கி வரைபு மூலமா செலுத்தப்பட்டது என்பதையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0049/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1997 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு யூலை 31 வரையில் ஹோட்டல் டெவலபர்ஸ் (லங்கா) லிமிட்ரெட் (எச்டிஎல்)ற்கு திறைசேரியினால் வழங்கப்பட்ட கடன்களை அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) எச்டிஎல் ற்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு கடனின்போதும், விதிகளையும் நிபந்த னைகளையும் குறித்துரைத்து திறைசேரியினால் எச்டிஎல் ற்கு வழங்கப்பட்ட கடிதங்களை அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2007 ஆம் ஆண்டு ஜூலை 31ல் உள்ளவாறாக ஒவ்வொரு கடனிலும் எஞ்சியுள்ள முதலையும் வட்டியினையும்,

(ii) செலுத்தத் தவறிய இக் கடன்களில் 2007 ஆம் ஆண்டு ஜூலை 31ல் உள்ளவாறாக, எச்டிஎல் னால் செலுத்தப்பட்ட மீள்கொடுப்பனவினையும்,

(iii) எச்டிஎல் ற்கு அரசாங்கம் எவ்வளவு கடனை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மதிப்பிடப்பட்டவாறு பிரதான விலை மதிப்பீட்டாளரினால் எச்டிஎல் ற்கு சொந்தமான, காணி தவிர்ந்த ஹில்டன் ஹோட்டலின் பெறுமதியையும்,

(ii) ஹில்டன் ஹோட்டலின் பெறுமதியை விட அதிகமான, அரசாங்கத்திற்குச் செலுத்தப்படவேண்டிய கடன்களின் அளவினையும்,

(iii) 1997 லிருந்து எச்டிஎல் னால் செலுத்தப்படாத கடன்களை தற்காலிகமாக மீள அறவிடுவதில்லை என அமைச்சரவை தீர்மானித்துள்ளதா என்பதையும்,

(iv) இச் சலுகை ஏனைய ஹோட்டல்களுக்கும் வழங்கப்படுமா என்பதையும்,

(v) இல்லையெனில், அதற்கான காரணத்தினையும்,

(vi) நிதி அமைச்சின் செயலாளர் இது தொடர்பான சரியான நிலைமையினைச் சபைக்கு விளக்காத காரணத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0134/ '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தை ஏற்றதன் பின் கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0135/ '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தை ஏற்றதன் பின் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள-

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி, அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0136 / '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கோட்டே பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த-

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தை ஏற்றதன் பின் கோட்டே பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி, அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0172/ '08

7.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச அனுசரணையுடன் அனுராதபுர மாவட்டத்தில், மாத்தளைச் சந்தி, குருந்தன்குலமவில் வரையறுக்கப்பட்ட ஜனதா லங்கா மிளகாய் கம்பனி எனும் பெயரில் ஒரு கம்பனி தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அக்கம்பனியின் தலைவர் யார்,

(ii) ஒரு பணிப்பாளர் சபையும், ஒரு உத்தியோகத்தர் சபையும் நியமிக்கப் பட்டிருப்பின் அவர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை,

(iii) கம்பனி தாபிக்கப்படும் பொருட்டு வடமத்திய மாகாண சபையின் அல்லது அரசாங்கத்தின் பணம் அல்லது வளங்கள் பயன்படுத்தப்பட்டதா,

(iv) ஆமெனில், பணம் இடப்பட்ட நிறுவனம் மற்றும் பணத்தொகை யாது,

(v) வேறு வசதிகள் வழங்கப்பட்டிருப்பின், அவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கம்பனியில் கமக்காரர்கள் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்களா,

(ii) ஆமெனில், அவர்களுடைய பெயர், முகவரிகள், அங்கத்துவப் பணம் அல்லது அவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது,

(iii) அங்கத்துவப்பணம் சேகரிக்கப்பட்டிருப்பின் அவை எந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன,

(iv) அங்கத்துவப் பணத்தொகைகளை மீளச்செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) கைவிடப்பட்டிருந்த மேற்படி கம்பனி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதெனில், அது எப்போது,

(ii) இதன் பொருட்டு கமநெகும கருத்திட்டத்தின் மூலம் பணம் ஒதுக்கப் பட்டிருப்பின், குறித்த பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0173 / '08

8.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டுக்குத் தேவையான சோளம் எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு சோளம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ)(i) சோளச் செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் எண்ணிக்கையையும் அவை என்ன என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலமும் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு சோள விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான சோள விதைகள் கிடைக்காமையினால் சோளச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக்குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) சோளச் செய்கை பின்னடைவு கண்டிருப்பின் சோளச் செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0174 / '08

9.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டுக்குத் தேவையான செத்தல் மிளகாய் எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு செத்தல் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) செத்தல் மிளகாய் செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் எண்ணிக்கையையும் அவை என்ன என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலமும் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு செத்தல் மிளகாய் விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான செத்தல் மிளகாய் விதைகள் கிடைக்காமையினால் செத்தல் மிளகாய் செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக் குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) செத்தல் மிளகாய் செய்கை பின்னடைவு கண்டிருப்பின் செத்தல் மிளகாய் செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0301/ '08

10.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான வெஹெரகலப் பிரிவில் றுஹுஹுணுகம அலகில் 125 ஆம் இலக்க காணியில் சுமார் 10 வருடகாலமாக எல். கே. நிமல் என்பவர் இரண்டு மாடிக்கட்டிடமொன்றை அமைத்து நிரந்தரமாகக் குடியிருக்கின்றாரென்பதையும்,

(ii) இக்கட்டிடத்துக்கு மின்சாரம் பெறுவதற்காக வெஹெரகலப் பிரிவு முகாமையாளரினால் உரிமை உறுதிப்படுத்தப்பட்ட கடிதமொன்று மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) இவர்களின் பெயர்கள் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் காணப்படுகின்ற தென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்காணியையும் இக்கட்டிடத்தையும் மகாவலி அதிகாரசபைக்குச் சுவீகரித்துக் கொள்வதற்காக பொலன்னறுவை நீதவான் நீதிமன்றத்தில் 44 149/06 ஆம் இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை வெறும் அரசியல் பலிவாங்கலாகும் என்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டுத் தேர்தலின்போது மகாவலி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவரின் வீட்டுக்கு துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்துவிட்டு ஓடினார்கள் என்பதையும்,

(iii) இது தொடர்பாக அரலகன்வில பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவரின் காணியைச் சுற்றியுள்ள ஏனைய அனைத்து காணிகளும் ஆரம்பத்தில் காணி பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்டு அனுபவிக்கப்பட்டு வருகின்ற வையாக உள்ளதுடன் அக்காணிகள் தொடர்பாக இவ்வாறான நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது ஏனென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) திரு. நிமலுக்கு மேலும் இவரின் வீட்டையும் காணியையும் அனுபவிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் குறிப்பிடு வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0535 / ' 0 8

11.

கௌரவ அநுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வி நிறுவகத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி வருடங்களுக்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவுகளின் செலவு விடயங்கள் யாவை என்பதையும்,

(iii) குறிப்பிட்ட வருடங்களில் நிதி முன்னேற்றம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந் நிறுவகத்திற்கு ஏனைய அமைப்புகள் (உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற) மற்றும் நிறுவனங்கள் மூலம் மேற்படி வருடங்களில் வழங்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இந் நிறுவனங்களினால் எக் கருத்திட்டங்களுக்காக பணம் வழங்கப்பட்ட தென்பதையும்,

(iii) இக் கருத்திட்டங்களின் நோக்கங்கள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0602 / ' 0 8

12.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1574 ஆம் இலக்க, பஹல லப்பல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெனிவெரலுவ கிராமத்தில் 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/76/01 இல் வசிக்கும் திரு. தென்ன கெதர உபுல் பிரியந்த ரன்வல உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் பிரதம குடியிருப்பாளர்

இலக்கம் 430/176 இலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/129 இல் வசிக்கும் திரு. அபேசிங்க முதியன்சேலாகே செனவிரத்ன உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் 430/243 ஆம் இலக்கத்திலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/232 இல் வசிக்கும் திரு. நிபுணச்சாரி கணிதலாகே பிறேம ரஞ்சித் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/165 இலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 930/217 இல் வசிக்கும் திரு. ஜயசிங்க ஆரச்சிலாகே தினேஷ் பிரிய சுரங்க பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/63/01 இலும் இரட்டைப்பதிவுள்ளவர்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் மூலம் ஒரே நபருக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் வாக்களிக்க முடியுமாயுள்ளதென்பதையும்,

(ii) இதன் காரணமாக ஒரு சில அரசியல் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளருக்கு ஏதேனும் அநீதி நேரிடுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இது தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதா,

(ii) விசாரணையின் போது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டார்களா,

(iii) அவ்வாறு அடையாளம் காணப்பட்டிருப்பின் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், எதிர்காலத்தில் மேற்படி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0628 / '08

13.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, அரச சார்புடையதும் இலாபம் ஈட்டாததும் முழுமையாக அரச நிதியில் பராமரிக்கப்படுகின்றதும் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தின் கணக்காய்விற்கு உட்பட்டு நடத்தப்படுகின்றதுமானதொரு நிறுவனம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிறுவனத்தின் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுவது 4/2005 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய பிரசவ விடுமுறையன்றி, 3/2004 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றுநிருபத்திற்கமைவான பிரசவ விடுமுறையே என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட 4/2005 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்ட 3/2004 ஆம் இலக்க சுற்றுநிருபம் தொடர்ந்தும் இந்த நிறுவனத்திற்கு ஏற்புடையதாக இருப்பது எப்படி,

(ii) இது யாருடைய பணிப்புரை,

(iii) அவர் பொதுநிர்வாக சுற்றுநிருபத்தை மாற்றுவது எப்படி,

(iv) அதற்காக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதி பெறப் பட்டிருந்தால், எப்பொழுது பெறப்பட்டது,

(v) இன்றேல் உத்தியோகத்தரொருவதால் அமைச்சுக்கு அறிவிக்காமல் எடுக்கப்பட்ட தீர்மானமா,

(vi) இது அமைச்சின் பணிப்புரையாக இருப்பின் 4/2005 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றுநிருபம் மாத்திரம் ஏற்புடையதாகாமல் ஏனைய பொதுநிர்வாக சுற்றுநிருபம் ஏற்புடையதாவது எப்படி,

(vii) எதிர்காலத்தில் 4/2005 ஆம் இலக்க சுற்றுநிருவத்தின் பிரகாரம் உத்தியோ கத்தர்களுக்குப் பெற்றுக்கொடுப்பாரா,

(viii) இன்றேல், அதன் காரணம் யாது,

(ix) சம்பந்தப்பட்ட பிரசவ விடுமுறையைப்பெறாத பெண் உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கும் நலன்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0666 / ' 08

14.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பள்ளம பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கொலஎலிய வாவிக்கும் வாவியின் ஒதுக்குப் பிரதேசத்திற்கும் சொந்தமான முழுக்காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(ii) இதன் மூலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படுகின்ற வயற்காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1984 ஆம் ஆண்டில் கொலஎலிய வாவி புனரமைப்பதற்கு முன்னர் வாவிக்குள் மூழ்குவதாக இனங்காணப்பட்ட சதுப்பு நிலங்களின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(ii) இந்நிலங்களின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி உரிமையாளர்களுக்கு வாவியின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சட்டரீதியாக மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) அவ்வாறு மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொண்ட வர்களின் பெயர்ப் பட்டியலையும், வழங்கப்பட்ட முழுக்காணியின் பரப்பளவையும், வழங்கப்பட்ட திகதியையும், இவ்விடயத்தில் ஈடுபட்ட நிறுவன உத்தியோகத்தர்களின் பெயர் களையும், வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(உ) மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டதன் பின்னரும் சதுப்பு நிலங்களுக்கு உரித்துடைய சிலரை அந்நிலங்களிலிருந்து அகற்றுவதற்கு இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) (i) மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டிருந்தும் இவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கான காரணம் யாதென்பதையும்,

(ii) இக்காணிகளில் சட்டவிரோதமாக நிர்மாணப் பணிகளும், மின்கம்பி பொருத்துதலும் எவ்வாறு நிகழ்ந்ததென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(எ) இன்றேல், ஏன்?

0668 / '08

15.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சிலாபம் மாதம்பே பிரதேச செயலாளர் பிரிவில் நடாத்தப்படும் இந்திய கம்பனி யொன்றுக்குச் சொந்தமான "புவல்கா" என்றழைக்கப்படும் இரும்பு உருக்கும் தொழிற்சாலையின் கழிவுகள் அகற்றப்படும் இடம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அது தொடர்பாக சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கழிவுப் பொருட்கள் கலப்பதனால் அயலிலுள்ள கிணறுகளுக்கும் நிலக் கீழ் நீருக்கும் பாதிப்பேற்படுகின்றதென்பதையும்,

(ii) இத்தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் புகைத்துகள்கள் அயல் பாகத்தில் சுமார் 4 - 5 கிலோமீற்றர் வரை பரவிச் செல்கின்றதென்பதையும்,

(iii) இது மக்களின் சுவாச நோய்கள் அதிகரிப்பதற்கு காரணமாகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) இத்தொழிற்சாலையின் புகைத்துகள்கள் வெளிப்படுவதைக் கட்டுப்படுத்த உயர் நீதிமன்றத்தினால் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் யாவை,

(ii) அதன் பிரகாரம் தொழிற்சாலையின் நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப் பட்டுள்ளதா,

(iii) அவ்வாறாயின், அது யாரினால் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இதுவரை இத்தொழிற்சாலையினால் ஏற்படும் பாரிய சுற்றாடல் பாதிப்பை தவிர்ப்பதற்கு அவர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி(இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்திச் சங்கத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி(இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு
சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| தலைப்பு 142 — | கலாசார அலுவல்கள்,<br>தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | மொத்தம் | **18,000,000** |

**(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)**

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*3.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 118, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து நூற்றி எண்பத்தி ஐந்து கோடியே நாற்பது இலட்சம் (ரூபா 1185,40,00,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | ரூபா |
|---|---|---|---|
| தலைப்பு 118 | — | கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — | கமத்தொழில் அபிவிருத்தி | |
| | | மீண்டுவரும் செலவினம் | 1185,40,00,000 |
| | | மொத்தம் | 1185,40,00,000 |

**(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)**

† 2008, யூலை மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 4 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,216,180,332.

*4.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்.— இரண்டாம் மதிப்பீடு

*6.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*7.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*8.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*11.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*12.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*15.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*18.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*19.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 அ மற்றும் 23 ஆ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதிய 1534 /18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*22.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*23.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில்

மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்ட றிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*31.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

32.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.